# வேதாகமத்தில் தீர்க்கதரிசனங்கள்

*வேதாகமத்தினுடைய கருத்தின்படி, தீர்க்கதரிசனம் என்பது கடந்த கால, நிகழ் கால அல்லது எதிர்காலத்துடன் தொடர்புடைய செய்தியாக தேவனிடத்திலிருந்து வருவதாகும். மனிதரின் சிந்தைகள் கடந்த கால மற்றும் நிகழ்காலத்தை ஆராயக் கூடியதாகவும், எதிர்காலத்தை முன்னறிவிக்க முடியாதவைகளாகவும் இருப்பதால், வரப்போகிற நிகழ்ச்சிகள் பற்றிய மிகச் சரியான முன்னுரைத்தல்கள் இயற்கைக்கு மேலானதாகவே இருக்க வேண்டும். ஆகையால், வேதாகமத்தின் தீர்க்கதரிசனங்கள் தெய்வீகத்தின் வெளிப்பாடாகவே இருக்கின்றன. அறிவின் அற்புதம் என்பது வல்லமையின் அற்புதம் போலவே இயற்கைக்கு மேலானதாகும். மனிதரால் வேறு எவ்வகையிலும் அறிய முடியாத எதிர்கால நிகழ்ச்சிகளை வேதாகமம் மிகச் சரியாக முன்னுரைத்திருக்கிறதென்றால், அந்த முன்னுரைத்தலானது மனிதனல்ல, தேவனே வேதாகமத்தின் ஆசிரியர் என்பதற்கு நிரூபணமாய் உள்ளது.*

*பல வகையான தீர்க்கதரிசனங்கள் வேதாகமத்தில் காணப்படுகின்றன. குறிப்பிட்ட நகரங்கள், நாடுகள், மற்றும் மக்கள், தேவனுடைய இராஜ்யம் மற்றும் இயேசு உட்படத் தனி நபர்கள் பற்றிப் பல முன்னுரைத்தல்கள் ஏற்படுத்தப்பட்டன. (இயேசுவைப் பற்றிய பல முன்னுரைத்தல்கள் முந்திய பாடத்தில் குறிப்பிடப்பட்டன, இவைகள் இப்பாடத்தில் விரிவாக்கப்பட்டுக் கூறப்படும்).*

## நகரங்களைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்

### எரிகோ

*யோசுவாவின் கீழ் எரிகோவின் அழிவுக்குப் பிறகு, அந்நகரத்தை மறுபடியும் கட்டப் பொறுப்பு ஏற்பவரின் மூத்த மற்றும் இளைய மகன்கள் மரிப்பார்கள் என்ற வழக்கத்திற்கு மாறான முன்னுரைத்தல் ஏற்படுத்தப்பட்டது (யோசு. 6:26). இந்த முன்னுரைத்தலானது ஐந்நூறு*

*வருடங்களுக்குப் பின், ஈயேல் என்பவரிடத்தில் குறிப்பாய் நிறைவேறியது. எரிகோ மறுபடியும் கட்டப்படும் பொழுது, பெத்தேல் ஊரைச் சேர்ந்த இவர் தம் மூத்த மகனான அபிராமையும் தம் கடைசி மகனான செகூப்பையும் சாகக் கொடுத்தார் (1 இரா. 16:34).*

## தீரு

*"பெனிக்கியாவின் மிக மேன்மையான நகரமும், உலகின் மிகப் பழமையான வியாபார ஸ்தலமுமாயிருந்த" தீரு நகரைப் பற்றித் தேவனுடைய தீர்க்கதரிசிகளில் குறைந்தது ஐந்து பேர் தெய்வீக செய்தி கொடுத்திருந்தனர். அந்நகரானது பல நாடுகளால் தாக்கப்படுவதாய் இருந்தது (எசே. 26:3). இது பாபிலோனியர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள் மற்றும் துருக்கியர்கள் ஆகியோரின் தாக்குதல்களில் நிறைவேற்றப்பட்டது. தீருவானது எழுபது வருடங்களுக்கு மறக்கப்பட்டிருக்க வேண்டியிருந்தது (ஏசா. 23:15). இந்த முன்னுரைத்தலானது பாபிலோனியத் தாக்குதலால் முதல் முறையாகத் தீரு தூக்கியெறியப் படுவதற்கு 125 ஆண்டுகள் முன்னதாக ஏற்படுத்தப்பட்டது. ஏறக்குறைய முக்கால் நூற்றாண்டு மறக்கப்பட்டிருந்த பிறகு, இன்னொரு வலுவான முன்னுரைத்தலின்படி, தீருவானது கடலின் நடுவில் பலத்த நகராயிற்று (எசே. 26:17). எழுபது ஆண்டுகள் கைவிடப்பட்டிருந்த பிறகு, திரும்ப வந்தவர்கள் பழைய நகரை மறுபடியும் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, கரையில் இருந்து அரை மைல் தொலைவில் இருந்த தீவு ஒன்றுக்குச் சென்று சேர்ந்தார்கள்.*

*தீருவின் கற்கள், மரத் தளவாடங்கள் மற்றும் மண்குப்பைகளும் கூட கடலிலே எறியப்பட்டு, அதன் வெறும் பாறையானது வெளியாக்கப்படும் (எசே. 26:12-14) என்று எசேக்கியேல் முன்னுரைத்தார். இது, மகா அலெக்ஸாண்டர் பழைய நகரில் இருந்து புதிய தீவு நகருக்குள் செல்ல வழியொன்றைக் கட்டுவதற்காகத் தூக்க முடிந்த எல்லாவற்றையும் பயன் படுத்திக் கொண்டதில் குறிப்பிடத்தக்க வகையில் நிறைவேறியது. பழைய நகரானது வலைகளை விரிக்கும் இடமாகும் என்றும் தீர்க்கதரிசி முன்னுரைத்திருந்தார் (எசே. 26:5, 14). பழைய நகர் இருந்த இடத்தில் மீன் பிடிப்போரின் வலைகள் பாறையின் மீது உலர்த்தப்படுவதைப் பயணிகள் கண்டிருக்கின்றார்கள். புதிய நகரானது தீக்கிரையாகும் என்று தீர்க்கதரிசி முன்னுரைத்தார் (ஆமோஸ் 1:10; சக. 9:3, 4). மகா அலெக்சாண்டர் தன் முற்றுகையைத் தீரு நகரம் அதிக காலம் எதிர்த்து நின்றதால் அதின் மேல் கோபமூண்டவராகி, கடைசியில் அந்நகரைத் தீக்கிரையாக்கி அழித்தார்.*

*பிற்காலங்களில் தீரு நகரத்தார் விக்கிரகாராதனையிலிருந்து மனந்திரும்பி உண்மையான தேவனை ஏற்றுக் கொண்டார்கள். பெனிக்கியாப் பெண்ணொருத்தியின் பெரிதான விசுவாசத்திற்காக இயேசு அவளைப் பாராட்டினார் (மத். 15:21-28), மற்றும் பவுல் எருசலேமுக்குத் தாம் கடைசியாகப் பயணம் சென்ற வேளையில் தீருவில் கர்த்தருடைய சபையைக் கண்டார் (அப். 21:3-5). டயக்ளீஷியன் உபத்திரவப்படுத்திய*

காலங்களில் தீரு பட்டணமானது “அறிக்கையிடுபவர்கள் மற்றும் இரத்த சாட்சிகள் பலரை அளித்தது.”

**பாபிலோன்**

நினிவேயைத் தலைநகராய்க் கொண்டிருந்த அசீரியாவானது பல ஆண்டுகளாக (C. கி.மு. 854-612) உலகின் ஆதிக்க வல்லமையுள்ள நாடாய் இருந்தது. பாபிலோனைத் தலை நகராகக் கொண்ட கல்தேயாவின்[1] எழுச்சி மற்றும் அதன் கடைசியான வீழ்ச்சி ஆகியவை பற்றி (C. கி.மு. 605-538) பலஸ்தீனத்தின் தீர்க்கதரிசிகளில் இரண்டு பேர் கூறினார்கள். அசீரியாவில் எந்த ஒரு வீழ்ச்சியையும் மனித கண்ணோட்டத்தின்படி காண முடியாதிருந்தது, ஆனால் ஏவப்பட்ட தீர்க்கதரிசிகள் அதன் எழுச்சியை மட்டுமின்றி, இன்னொரு உலக வல்லமை/அதிகாரம் முடிவு பெறுதலைப் பற்றியும் தைரியமாய் அறிவித்தார்கள் (ஏசா. 13:19; 21:9). அப்பேரரசின் வீழ்ச்சியானது அது நடைபெறுவதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே முன்னுரைக்கப்பட்டது. பின்பு, கல்தேயாவின் எழுச்சிக்குப் பிறகு, தேவன் அழிவின் செய்தியுடன் அது நடக்க ஐம்பத்தி ஆறு வருடங்கள் முன்பாகவே இன்னொரு தீர்க்கதரிசியை அனுப்பினார் (எரே. 25:12; 27:8; 50:10; 51:24; மற்றும் ஆபகூக் 2ஐயும் காணவும்).

தாக்குதலுக்கு அசைந்து கொடுக்காததாக தலைநகர் ஒன்று தோன்றியிருந்ததென்றால், அது பாபிலோன் தான். உயர்ந்த, கனத்த மதில்களும் வெண்கலக் கதவுகளும் அதைத் தாக்குபவர்கள் எல்லாரையும் எதிர் தள்ளியிருந்தன, இருப்பினும் அந்த மாபெரும் நகரானது வீழ்ந்து போகும் என்று யூதேயாவில் இருந்த தேவனுடைய தீர்க்கதரிசிகள் தைரியமாய் அறிவித்தார்கள்.

பாபிலோன் வீழ்ச்சியைப் பற்றிக் குறிப்பான விபரங்கள் அறிவிக்கப்பட்டன. மேதியர்களும், எலாமித்தர்(பெர்சியர்)களும் தாக்குதலில் வெற்றியடைவார்கள் என்றும், அவர்களின் பெயர்களும் கூட குறிப்பாய்க் கூறப்பட்டது (தானி. 5:28). கோரேஸ் என்ற அவர்களின் அரசனுடைய பெயரும் கூட சுட்டிக்காட்டப்பட்டது (ஏசா. 44:28). அவர் கைப்பற்றிய பல இராஜ்யங்களில் சில அவரது தாக்குதல் படையின் அங்கங்களாயிருக்கும் (எரே. 50:27-32). நதியானது வற்றிப்போகும் (ஏசா. 44:27; எரே. 51:36). இது ஐப்பிராத்து நதியின் ஓட்டத்தைக் கோரஸ் மாற்றி விட்டு, நதிப் படுகையின் மூலமாக நகருக்குள் நுழைந்த பொழுது கி.மு. 538ல் நிறைவேற்றப்பட்டது. பாபிலோனின் களியாட்டமும் குடி வெறியும் முன்னுரைக்கப்பட்டன (எரே. 51:39, 58). சில வாசல்கள் திறந்து வைக்கப் பட வேண்டியிருந்தது (ஏசா. 45:1). ஒரு கொண்டாட்டத்தின் போது நதியின் இருபுறத்திலும் நகருக்குள் இருந்த கதவுகள் அஜாக்கிரதையாய்த் திறந்து வைக்கப்பட்டிருந்த பொழுது, குடி போதையில் இருந்த அரண்மனைக் காவலர்களை அங்கு நுழைந்த கோரேஸின் படை வீரர்கள் திகைக்கச் செய்த பொழுது இந்த முன்னுரைத்தல்கள் நிறைவேறின. பெரும் செல்வங்கள் எடுத்துச் செல்லப்படும் என்று தீர்க்கதரிசி (ஏசா. 45:4)

கூறியிருந்தார், அதுவும் நடந்தது.

முற்றிலும் பாழாக்கப்படுவதே பாபிலோனின் முடிவாய் இருந்தது (ஏசா. 47:11). நிறைவேறுதலானது படிப்படியாய் நடந்தது. நகரத்தைக் கோரேஸ் குறைவு படுத்திய பிறகு, அது மறுபடியும் பெர்சியனான தரியுவால் பிடிக்கப்பட்டுப் பிறகு மகா அலெக்ஸான்டராலும் பிடிக்கப்பட்டது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் போது, அங்கு சுவர்களைத் தவிர வேறு எதுவும் எஞ்சியிருக்கவில்லை. சாராசேனியர்களின் காலத்தில் முன்பு உயரமாய் இருந்த மதில்கள் பாலைவனத்தின் நகரும் மணல்களால் மறைக்கப்பட்டு, பாழ்க்கடிப்பு முழுமையாயிற்று. அது தண்ணீர் நிற்கும் பள்ளங்களாகவும் (ஏசா. 14:23), வரட்சியும் வனாந்தரமுமான பூமியாகவும் (எரே. 51:43) ஆகும் என்று தீர்க்கதரிசிகள் கூறியிருந்தார்கள். இவ்விரு தீர்க்கதரிசனங்களுமே உண்மையாயிற்று; பாபிலோனின் உலர்ந்த பாலைவனத்தில் ஆங்கங்கே தண்ணீர் தேங்கி நிற்கும் குட்டைகள் காணப்படுகின்றன.

ராஜ்யங்களுக்குள் அலங்காரமாகவும், கல்தேயருடைய பிரதான மகிமையாகவும் வல்லமையுள்ள பாபிலோன் எழும்பும் என்று தீர்க்க தரிசனம் உரைக்கப்பட்டது (ஏசா. 13:19). பிறகு அது, பயம் மிகுந்ததால், மேய்ப்பர்கள் கூட அங்கு ஓரிரவும் கூட தங்கியிராதபடி தனிமையான இடமாகிவிடும் (ஏசா. 13:20). அது காட்டு மிருகங்களும், ஊளையிடும் பிராணிகளும் வாழும் இடமாகும் (ஏசா. 13:21, 22). அதன் செல்விக்கையான அரமனைகள் ஓரிகளுக்கும், அதன் ஆடம்பரங்கள் வலுசர்ப்பங்களுக்கும் வாழும் இடமாகும் (ஏசா. 13:22). அரை மைல் சுற்றளவும், 600 அடிக்கும் மேற்பட்ட உயரமும் கொண்ட பேல் என்ற தெய்வத்தினுடைய மாபெரும் ஆலயமானது அழிந்து போகும் (எரே. 51:37ஐக் காணவும்). தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த மாதிரியே, அங்கே போகும் பயணிகள் ஆச்சரியத்தால் நிரப்பப்படுகிறார்கள் (எரே. 51:43, 44).

பாபிலோனிய நிலத்தின் கைவிடப்பட்ட நிலைமையானது இன்றும் தொடருகின்றது, ஒருவேளை நன்னம்பிக்கை முனையின் கண்டு பிடிப்பானது இந்தியாவுக்குச் செல்லப் புதிய வழித்தடத்தை ஏற்படுத்தி இருக்கலாம். எந்தக் காரணத்தினாலும் தொடரும் இந்தப் பாழ்க்கடிப்பானது தீர்க்கதரிசியின் வார்த்தையினுடைய அன்றாட நிறைவேற்றமாக என்றென்றும் இவ்விடம் பாழ்க்கடிப்புள்ளதாயிருக்கும் படியாக வேண்டும். தேவனுடைய எழுத்தானது எழுதப்பட்ட வேதாகமத்தில் காணப்படுகின்றது, அது கைவிடப்பட்டுள்ள பாபிலோனின் நிலத்திலும் தெளிவாய்க் காணப்பட முடியும்.

### நினிவே

நினிவே நகரமானது அறுபது மைல் சுற்றளவுள்ள, “மூன்று நாள் பிரயாண” (யோனா 3:3) தூரமுள்ள மாபெரும் நகரமாய் இருந்தது. நூறடி உயரமுள்ள அதன் மதில்கள், ஒவ்வொன்றும் இருநூறடி உயரம் கொண்ட ஆயிரத்து ஐந்நூறு கோபுரங்களைத் தாங்கி நின்றன. இவ்வளவு பலம் இருந்த

*போதிலும், இந்த நகரத்தின் பாவங்கள் இதன் அழிவைப் பற்றிய தேவனின் முன்னுரைத்தலைக் கொண்டு வந்தன. அது புரண்டு வரும் வெள்ளத்தினாலும் (நாகூம் 1:1, 8; 2:6) மற்றும் அக்கினியினாலும் (நாகூம் 3:13) அழிக்கப்படும் என்பது அவருடைய முன்னுரைத்தலாய் இருந்தது. கி.மு. 612ல் இவ்விரண்டுமே நடைபெற்றன. டைகிரீஸ் நதியானது நகரின் ஒரு பகுதியை வெள்ளத்தினால் மூழ்கடித்தது, அதன் சுவரின் ஒரு பகுதியைத் தண்ணீர் கரைத்து, எதிரிகள் உள்ளே நுழைய அனுமதித்தது. அதன் அரசர் சவஅடக்கத் தீ ஒன்றை வளர்த்து, தனது அரண்மனை, தனது வீட்டார் மற்றும் தன்னையும் எரித்துக் கொண்டார். அதன் பொன் முதலாய்க் கொள்ளையிடப்படும் என்று தேவன் முன்னுரைத்திருந்தார் (நாகூம் 2:9), இது வரலாற்றினால் உறுதி செய்யப்பட்டதாகவே உள்ளது. நினிவே இருந்த இடம் கைவிடப்பட்டு, அதன் புகழ் வாய்ந்த பெயரானது எடுத்துப் போடப்படும் அபாயத்துக்குள்ளாகியது.*

***தமஸ்கு***

*தமஸ்கு நகரமானது அக்கினியினாலும் கூடத் தண்டிக்கப்படும் என்று ஆமோஸ் தீர்க்கதரிசனம் கூறினார் (ஆமோஸ் 1:3-14). அது பாழான மண்மேடாகும் என்று ஏசாயா உறுதிப் படுத்தியிருந்தார் (ஏசா. 17:1). இன்று வரை தமஸ்கு இருந்தாலும், இத்தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியிருக்கின்றன. அது பல முறை பாழான மண்மேடாகியுள்ளது. கி.மு. எட்டாம் நூற்றாண்டில் அசீரிய அரசன் தமஸ்குவை கைப்பற்றி, அதன் குடிகளை வெளியேற்றினான். தமஸ்குவானது மகா அலெக்ஸான்டராலும், மீண்டும் சாராசேனியர்களாலும் குறைவு படுத்தப்பட்டது.*

## *இனங்கள் மற்றும் மக்களைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்*

***எபிரெயர்கள்***

*வேறு எந்த மக்களைப் பற்றியும் குறிப்பிடப்பட்டதைக் காட்டிலும் அதிகமான தீர்க்கதரிசனங்கள் எபிரெயர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் எகிப்தில் அடிமைப் படுத்தப்படுவார்கள் (ஆதி. 15:13, 14). குறிப்பிட்ட காலத்தில் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் (ஆதி. 46:4). அவர்களுக்குக் கானான் நாடு கையளிக்கப்படும் (ஆதி. 15:18). அவர்களுடைய இனம் பெரிய ஜாதியாகும் (ஆதி. 46:3). அவர்களுடைய இராஜ்யம் இரு இராஜ்யங்களாகும் (1 இரா. 11:31, 32); தெற்கு இராஜ்யமானது அசீரியாவிடமிருந்து மீட்கப்படும், ஆனால் பாபிலோனால் வீழ்த்தப்படும் (1 இரா. 14:15, 16); இருந்தாலும், அது முற்றிலுமாக அழிக்கப்படாது. பாபிலோன் உட்பட அதைக் கைப்பற்றிய எல்லா நாடுகளும் இல்லாமற் போகும், ஆனால் யூதா என்றென்றைக்கும் இருக்கும் (ஏசா. 13:20). யூதா எழுபது ஆண்டுகளுக்குப் பாபிலோனைச் சேவித்து*

*மறுபடியும் மீட்டுக்கொள்ளப்படும் (எரே. 25:11, 12). தேவனுடைய சிட்சையானது யூதாவினிடத்திலிருந்து விக்கிரகாராதனையை என்றென்றும் நீக்கித் துப்புரவாக்கும். பின்னாளில் அது தன் மூலைக் கல்லைப் புறக்கணித்து அதினால் நசுக்கப்படும் (சங். 118:22).*

*எபிரேய மக்களைப் பற்றிய தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலானது வேத வசனங்களின் ஏவுதலுக்கு பலத்த சாட்சியாய் இருக்கிறது. அழிவு மற்றும் வேதனை, முற்றிலுமாக அழிக்கப்படாமை ஆகியவை பற்றிய முன்னுரைத்தல்கள் எபிரெயர்களால் எபிரெயர்களுக்கு ஏற்படுத்தப் பட்டன. அவைகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டன. வேதாகமத்தின் ஏவுதலுக்கான ஆதாரத்தைச் சுருக்கமாய்க் கூறும்படி மகா பிரடெரிக் தனது அரசவை குருவிடம் ஒருமுறை கேட்டார். "மகா மேன்மைக்குரியவரே, அது யூதர்களே ஆவார்கள்" என்பது விரைவான பதிலாய் இருந்தது.*

***அரபியர்கள்***

*இஸ்மவேலின் சந்ததியாரை யுத்தம் செய்பவர்களாகத் தேவன் ஏற்படுத்தவில்லை, ஆனால் அவர்கள் அப்படிப்பட்டவர்களாவார்கள் என்று அறிந்திருந்தார், ஆகையால் அது முன்னுரைக்கப்பட்டது (ஆதி. 16:12). மற்ற நாடுகளின் அழிவு பற்றிய முன்னுரைத்தல்களுக்கு மாறாக, அரபியர்களுக்கெதிரான அழிவு அபாயம் நிறைந்த முன்னுரைத்தல் எதுவும் காணப்படுவதில்லை. மற்ற நாடுகள் (மக்களினங்கள்) இல்லாமற் போகும், ஆனால் அப்பொழுதும் கூட அரபியர்கள் தேவனுடைய அறிவிப்புகளுக்கு இணங்க, வல்லமையுள்ள மக்களாய் இருப்பார்கள்.*

***மோவாபியர்கள்***

*மோவாபியர்கள் ஒரு காலத்தில் திரள் கூட்டமான வல்லமையுள்ள மக்களாய் இருந்தார்கள். அவர்களின் நிலமானது வளமைமிக்கதாகவும், அவர்களின் நகரங்கள் பெரியவைகளாகவும் இருந்தன. அவர்களின் பாவங்களினால், அவர்களின் நிலப்பகுதியானது காஞ்சொறி படரும் இடமும், உப்புப் பள்ளமுமாகி (செப்பனியா 2:9) - ஒவ்வொரு நகரும் அழிக்கப்பட்டு, மோவாப் ஒரு ஜனமாயிராதபடி அழிக்கப்படும் (எரே. 48:42) - என்று தேவன் தீர்க்கதரிசனம் உரைத்தார். இதன் மிகச் சரியான நிறைவேற்றமாக, பயணிகள் இப்பொழுது அப்பழைய நகரங்களின் சிதிலங்களை மட்டுமே காண்கின்றார்கள். சில குகைகளும் பாறைகளும் மனிதர் வாழும் இடங்களாய் இருக்கின்றன, ஆனாலும் மோவாப் என்ற மக்களினம் இன்று இல்லை.*

***அம்மோனியர்கள்***

*மோவாபியர்களைப் போலவே, அம்மோனியர்களும் வளம் பொருந்திய ஒரு நாட்டில் வாழ்ந்தார்கள், அவர்களின் நாடு மக்கள் கூட்டம் உள்ளதாய் இருந்தது. அம்மோனியர்களின் பாவங்களினால் அவர்கள்*

*முற்றிலும் அழிவார்கள் என்று தேவனுடைய தீர்க்கதரிசன வசனம் முன்னுரைத்தது. ரப்பா பாழான மண்மேடாகும் (எரே. 49:2). அவ்விதமாகவே அது காணப்படுகின்றது. காஞ்சொறி மற்றும் உப்புப் பள்ளங்களால் நிறைந்துள்ள அம்மோனியரின் நாட்டுப்புறமானது அது "நித்திய பாழுமாயிருக்கும்" (செப். 2:9) என்ற தீர்க்கதரிசனத்தை உறுதிப்படுத்துகின்றது. இன்றைய நாட்களில் அதன் ஒவ்வொரு திசைகளிலும் சிதிலங்கள் உள்ளன. ஒரு மக்களினம் என்ற வகையில் அம்மோனானது வேரற்றுப் போகப் பண்ணி, நாடுகளின் மத்தியில் நினைக்கப்படாமல் போனது (எசே. 25:7, 9). இன்றைய நாட்களில் எவரொருவரும் தம்மை அம்மோனியர் என்று அழைத்துக்கொள்வதுமில்லை, எந்த ஒரு நாடும் அந்த மக்களின் வழித்தோன்றல் என்று தன்னை உரிமைகோரிக் கொள்வதும் இல்லை.*

**ஏதோமியர்கள்**

*பதினேழு நூற்றாண்டுகளாக ஏதோமியர்கள் பெரிய மற்றும் பலம் நிறைந்த நாட்டவராக இருந்தார்கள். ஏதோமில் பல நகரங்கள் இருந்தன. அதன் தலைநகரான பெட்ரா (சேலா) என்ற நகரானது எகிப்து, பலஸ்தீனம் மற்றும் சீரியா ஆகிய நாடுகளில் இருந்து வரும் வியாபாரிகளைக் கவரக் கூடிய வாணிக மையமாக விளங்கியது. அத்துடன், வானவியல் மற்றும் கடற்பயணம் ஆகியவற்றில் ஆராய்ச்சியைத் தொடங்கியவர்கள் என்ற பெருமையையும் ஏதோமியர்கள் பெற்றிருந்தார்கள்.*

*ஒரு காலத்தில் மாபெரும் மக்களாய் இருந்த இவர்களின் பாவங்கள், தேவனுடைய நியாயத்தீர்ப்பையும் சாபத்தையும் கொண்டு வந்தன. செல்வமும் வளமையும் மிகுந்திருந்த இந்த நாடானது தீர்க்க தரிசனங்களின்படி (ஏசா. 34:5-10) தலைமுறைகள் தோறும் பாழானதாக்கி விடப்பட்டது. மனிதர் குடியேற்றமின்றி, அது முட்செடிகள், முட்பூண்டுகள், ஓரிகள், கோட்டான்கள் மற்றும் வலுசர்ப்பங்கள் ஆகியவை இருக்கும் இடமாயிற்று (ஏசா. 34:13-15; மற்றும் எரே. 49ஐயும் காணவும்). ஏதோம் அழிந்து போகும்.*

*அச்சமூட்டும் இந்தத் தீர்க்கதரிசனங்களின் மகிழ்ச்சியற்ற நிறைவேற்றமானது வேதாகமத்தின் மீதான பெருமதிப்பைக் கூட்டுகின்றது. இப்பொழுது பத்தொன்பது நூற்றாண்டுகளாக ஏதோம் என்பது ஒரு நாடாக இல்லாமல் அழிந்து போயிற்று. ஏதோமியர் என்று தன்னை உரிமை பாராட்டுகின்ற மனிதர் ஒருவரும் இல்லை. பெட்ரா போன்ற செல்வமும் பலமும் பொருந்திய நகரானது பாழாகிக் கைவிடப்படும் என்று வெறும் மனிதர் எவரும் கண்ணோட்டம் செய்திருப்பதென்பது முடியாத செயல் ஆகும். அது இருந்த இடமே பல நூற்றாண்டுகளாக அறியப்படாமல் இருந்தது; ஆனால் அதன் சிதிலங்களும், அத்துடன் ஏதோமியரின் மற்ற முப்பது நகரங்களின் சிதிலங்களும் கண்டறியப்பட்டுள்ளன. அரபியரான விலங்கு மேய்ப்பவர்கள் ஒரு சிலர் தவிர இவைகள் மற்றபடி கைவிடப் பட்டவைகளாய் உள்ளன - அவர்களும் கூட அங்குள்ள தேள்களினால் அந்த சிதிலமான இடங்களுக்குச் செல்லுவதற்குப் பயப்படுகின்றார்கள்.*

***பிலிஸ்தியர்கள்***

*பிலிஸ்தியர் என்பவர்கள் முன்பு வளமிக்க நாட்டில் வாழ்ந்த பெரிய இனத்தவராய் இருந்தார்கள். அஸ்கலோன், அஸ்தோத், எக்ரோன் மற்றும் காசா உட்படக் கோட்டைகள் சூழ்ந்த பல நகரங்கள் இருந்தன. அஸ்கலோன் உயர் வகைத் திராட்ச ரசத்திற்குப் பேர் பெற்றதாகும். அஸ்தோத் நகரமானது "வரலாற்றிலேயே மிக நீண்ட முற்றுகையை" தாங்கி நிலைத்திருந்தது. காசாவின் செல்வச் செழிப்பு அந்நகருக்குச் சாந்து பூசிய தரைகளும், பெரிய குளியறைகளும் உடைய மூன்று மாடி வீடுகள் பலவற்றைக் கொடுத்திருந்தது. மகா அலெக்ஸான்டரின் இரண்டு மாத முற்றுகையைத் தாங்கி நிலைத்திருக்கக் கூடிய அளவுக்கு அதன் கோட்டைப் பாதுகாப்புகள் போதிய பலம் உள்ளவைகளாய் இருந்தன.*

*இருப்பினும், பாவம் என்பது எந்த மக்களுக்கும் நிந்தையாகி, தேவன் அழிவைக் கொண்டு வருவதாய் உள்ளது. வெறுப்பு, முரட்டாட்டம் மற்றும் பல பாவங்களினால் தேவனுடைய தீர்க்கதரிசன வசனத்தின்படி பிலிஸ்தியா அழிக்கப்பட்டது. அதன் பலம் பொருந்திய நகரங்கள் தாழ்த்தப்பட்டு வெறுமையாக்கப்பட்டன. எக்ரோன், அஸ்கலோன், அஸ்தோத் மற்றும் காத்சா ஆகியவை தீர்க்கதரிசிகளால் குறிப்பாய்ப் பெயர் கூறப்பட்டன (செப். 2:4). தங்கள் மந்தைகளை அங்கு மேய்த்துக் கொண்டிருந்த அரபிய நாடோடிகளாலும் கூட பிலிஸ்தியா கைவிடப்பட்டு, பாலைவன நாடாக இருப்பதைப் பயணிகள் கண்டுள்ளனர். அஸ்தோத்தின் சிதிலங்கள் அதில் உள்ள தேள்களுக்காகச் சிறப்பாய்க் குறிப்பிடப்படுகின்றன. ஒரு காலத்தில் பழங்கால எக்ரோன் இருந்த மேடு எது என்பதே இன்னும் வழக்காடப்படுவதாய் உள்ளது. மகா அலெக்ஸான்டர் காத்சாவை முற்றிலுமாக அழித்துப் போட்டார், கடலில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ள அந்த இடமானது கைவிடப்பட்டது. அதிலிருந்து ஒரு மைல் தூரத்தில் அந்நகர் மீண்டும் கட்டப்பட்டது. அது புதிய இடத்தில் உள்ளது என்பதைச் சில எழுத்தாளர்கள் உணராதிருக்கையில், மிகச் சரியான எழுத்தாளர்கள் ''பழைய காத்சா'' மற்றும் ''புதிய காத்சா'' என்று கூறுகின்றார்கள். சிலர் பழைய நகரத்தை ''பாலைவனமாயிருக்கின்ற காத்சா" என்றும் குறிப்பிட்டார்கள்.*

***எகிப்தியர்கள்***

*ஒரு காலத்தில் வளம் பொருந்திய எகிப்து நாட்டில் இருபதினாயிரம் நகரங்கள் இருந்தன; ஆனால் தேவனுடைய தீர்க்கதரிசன வசனத்திற்கு இணங்க, எகிப்து அவாந்தரமாக்கப்பட்ட பாழான இடமாயிற்று (எசே. 29:12). இந்நாட்கள் வரையிலும் கூட எகிப்தின் பல பகுதிகள் பாழானவைகளாகவே இருக்கின்றன. ஒரு காலத்தில் பெருமைமிக்க நாடாய் இருந்த அவ்விடத்தில் சுய இனத்தாரின் ஆளுகை கூட ஒழிந்து போகும் என்றும் தேவனுடைய தீர்க்கதரிசி முன்னுரைத்திருந்தார் (எசே. 29:15). இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்த முன்னு ரைத்தலானது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.*

பாபிலோன், நினிவே, மோவாப், அம்மோன் மற்றும் ஏதோம் ஆகிய தேசங்களின் முற்றான அழிவு பற்றிய முன்னுரைத்தல்களுக்கு மாறாக, எகிப்துக்கெதிராக முற்றான நிர்மூலமாக்குதல் விதிக்கப்படவில்லை. இல்லாமல் போகும் என்று கூறாமல் எகிப்து குறைவுபடும் என்றே தீர்க்கதரிசி முன்னுரைத்தார். அது மற்ற இராஜ்யங்களிலும் அற்பமான தாகும் (எசே. 29:15) என்னப்பட்டது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அது அப்படியே இருந்து வருகின்றது. அதன் பெருமையை மீளக் கொண்டு வருவதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் எல்லாம் - வல்லமை நிறைந்த நெப்போலியனால் செய்யப்பட்ட ஒரு முயற்சி உட்பட எல்லாம் - தோல்வியடைந்துள்ளன.

**கிறிஸ்தவர்கள்**

எதிர்கால இராஜ்யம் ஒன்றின் மாபெரும் விஷயங்களைப் பற்றிப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தார்கள். இரண்டாம் தாவீது ஒருவரே அதன் ஒரே ஒரு முடியரசராக இருப்பார். அவருடைய சிங்காசனம் கிருபையினாலே ஸ்தாபிக்கப்படும் (ஏசா. 16:5). அவர் வல்லமையுள்ள தேவன் என்று அழைக்கப்படுவார் (ஏசா. 9:6). அவருடைய குடிமக்கள் (அவர் மீது) விருப்பம் உள்ளவர்களாய் இருப்பார்கள் (ஏசா. 2:3). அவரது ஆளுகை ஆவிக்குரியதாயிருக்கும் (ஏசா. 2:4ஐக் காணவும்). அவரது ஆட்சிப் பகுதி உலகளாவியதாக, அழிக்க முடியாததாக, நித்தியமானதாக, ரோமப் பேரரசின் நாட்களில் தொடங்குவதாக (தானி. 2:44) இருக்கும்.

இந்தத் தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமானது திகைப்புக்குரியதாய் இருந்தது! ரோமப் பேரரசின் நாட்களில், இவ்வுலகத்தினுடையதாயிராத இராஜ்யம் ஒன்று, பரலோகத்திலிருந்து வெளிப்பட்ட ஆளுகை ஒன்று - தாவீதின் தெய்வீகக் குமாரனை அரசராகக் கொண்டு நீதி, சந்தோஷம் மற்றும் சமாதானம் ஆகியவற்றைக் கொண்ட ஆளுகை ஒன்று - இந்தப் பூமியில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தப் பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட இராஜ்யத்தின் தீர்க்கதரிசனமானது தைரியமுள்ளதாகவும், அதன் ஒவ்வொரு நிறைவேற்றத்தின் மிகச் சரியான தன்மையும் ஏறக்குறைய நம்ப முடியாததாய் தோன்றியது.

## தனிநபர்களைப் பெயரிட்டுக் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்கள்

தீர்க்கதரிசனத்தின் நிச்சயமான வசனமானது பெயர் கூறப்பட்ட நகரங்கள் மற்றும் மக்களினங்களுக்கு விதிக்கப்பட்டதை மட்டுமின்றி, குறிப்பிட்ட தனிநபர்களுக்கு விதிக்கப்பட்டவைகளையும் முன் காண முடிந்தது.

*யோசியா*

*தாவீதின் சந்ததியில் வந்த ஒருவர் செய்யப் போவதாயிருந்தவற்றை அந்நிகழ்ச்சிக்கு முன்னூறு வருடங்கள் முன்னதாகவே "தேவனுடைய மனுஷர்" ஒருவர் "கர்த்தருடைய வார்த்தையின்படியே" (1 இரா. 13:1) அறிவித்தார். தாவீதின் வீட்டில் பிறக்கப் போகும் ஒரு குமாரனைப் பற்றி அந்தத் தீர்க்கதரிசனத்தில் பேசப்பட்டது; அந்தக் குமாரனுக்கு யோசியா என்று பெயரிடப்படும் என்று அது குறிப்பிட்டது, மற்றும் விக்கிர காராதனையை ஒழிப்பதில் அவர் தேவனிடத்தில் கொண்டிருக்கும் வைராக்கியம் பற்றியும் அது முன்னுரைத்தது (1 இரா. 13:2). வெறும் மனிதர் இவ்விஷயங்களை அறிந்திருக்க முடியாது.*

*ரேகாப்*

*கிறிஸ்துவுக்கு அறுநூறு வருடங்கள் முன்னதாக, சில குமாரர்கள் தங்கள் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததினால், தேவனுடைய தீர்க்கதரிசி, அவர்களை என்றென்றைக்குமாக ஆசீர்வதித்தார் (எரே. 35:18, 19). பத்தொன்பதாம் நூற்றாண்டில், மெக்காவுக்கு அருகில் தங்களை ரேகாபின் சந்ததியார் என்று உரிமை கோரிய அறுபதாயிரம் மக்கள் காணப்பட்டார்கள், இவர்கள் தூய யூதமதத்தைப் பின்பற்றியவர்களாகவும் எபிரெய மொழியை அறிந்தவர்களாகவும் இருந்தார்கள்.*

*சிதேக்கியா*

*துன்மார்க்கனான சிதேக்கியா, தேவனிடம் பயபக்தியில்லாது இருந்ததற்காக மகிழ்ச்சியற்ற பதிலீடுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. சிதேக்கியா, பாபிலோன் நகரத்துக்குக் கைதியாகக் கொண்டு செல்லப்பட்டு, அங்கேயே மரிப்பான், ஆயினும் அவன் பாபிலோன் நகரத்தைக் காண மாட்டான் என்று தீர்க்கதரிசி அறிவித்தார் (எசே. 12:13). வினோதமான இந்தத் தீர்க்கதரிசனத்தைக் கூறுவதற்கு தேவபக்தியற்ற அரசனான நேபுகாத்நேச்சார் என்ன செய்யக் கூடும் என்ற முன்னறிவு தேவைப்பட்டிருந்தது. தேவபக்தியற்ற அந்த அரசன், எபிரெயர் ஒருவரின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்காகச் சிதேக்கியா என்ற துரதிர்ஷ்டசாலியான கைதியைப் பாபிலோனுக்குக் கொண்டு செல்லும் முன் கண்களைப் பிடுங்குவதற்குச் சூழ்ச்சி செய்து இருக்க மாட்டார் என்று நாம் உறுதியாய்க் கூறலாம்.*

*அந்தியோகஸ்*

*நான்காம் அந்தியோகஸ் (எப்பிஃபேனஸ்) என்ற "பித்தம் கொண்ட மனிதன்"[2] பற்றிய தானியேலின் தீர்க்கதரிசனமானது மிகவும் சரியானதாகவும், துல்லியமானதாகவும் உள்ளது. அந்தியோகஸின் ஆட்சிக்காலத்திற்கு நானூறு வருடங்களுக்கு முன்பாக இது (தானியேல் 8 மற்றும் 11 ஆகியவற்றைக் காணவும்) எழுதப்பட்டிருக்க முடியாது என்று*

அவிசுவாசிகள் வெறுமனே உறுதியாய்க் கூறுகின்றார்கள். இந்த விபரங்கள் யாவும் தீர்க்கதரிசனம் மட்டுமின்றி வரலாறாகவும் உள்ளது என்று விமர்சகர்கள் உறுதிப்படுத்துமளவுக்கு இது மிகவும் தெளிவாக உள்ளது.

தானியேல் புத்தகத்தின் எழுத்தாக்கத்தைத் தவறெனக் கூறி நிற்கும் எழுத்துப் பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை. தானியேலின் பெயரில் அவருக்குப் பின் வந்த ஒருவர் தானியேல் என்ற போலிப் பெயரில் இதை எழுதினார் என்ற கருத்தும், இப்படிப்பட்டதொரு புத்தகத்தை தேவன் தமது வேதாகமத்தில் இணைக்கச் செய்தார் என்ற கருத்தும் தேவனுடைய இயல்புக்கும் அவரது வசனத்தின் இயல்புக்கும் ஏற்புடையதாயிருப்பதில்லை. தானியேல் தீர்க்கதரிசனமானது இயற்கைக்கு மேம்பட்டதாயுள்ளது என்பதற்கான ஆதாரத்தை ஒரு போலி என்று கீழே தள்ளுவதொன்றே அத்தீர்க்கதரிசனத்தை அழிக்கும் வழி என்னுமளவுக்கு தானியேலின் தீர்க்கதரிசனமானது அவ்வளவு தெளிவாகவும், கூர்மையாகவும் இருக்கின்றது.

**இயேசு**

*பொதுவான எதிர்பார்ப்பு.* வரப்போகிற மேசியாவைப் பற்றிய எபிரெய தீர்க்கதரிசிகளின் எழுத்துக்கள் ஒரு பொதுவான எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் எழுப்பியிருந்தன. “வருகிறவர் நீர் தானா ... ?” (மத். 11:3) என்பது பொதுவான விசுவாசத்தை வெளிப்படுத்தும் கேள்வியாய் உள்ளது. புறஜாதியாரும் யூதர்களும் உலகத்தை ஆசீர்வதிப்பதற்காக வரப் போகும் விசேஷித்த ஒருவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

*காலம் குறிப்பிடப்பட்டது.* ஏவுதல் பெற்ற தீர்க்கதரிசிகள், மேசியா வரப் போகின்றார் என்று முன்னுரைத்ததுடன், அவருடைய வருகையின் காலத்தையும் அறிவித்தார்கள். ரோமப் பேரரசு இருக்கும் பொழுதே (கி.மு. 65-கி.பி. 476) அவர் வரவேண்டியதாயிருந்தது. இரண்டாவது தேவாலயம் இருந்த பொழுதே - அதாவது கி.பி. 70க்கு முன் எல்லா நாட்டவரின் விருப்பமும் ஏற்படுவதாயிருந்தது. வம்சா வழி அட்டவணைகள் அழியு முன்பே - அதாவது கி.பி. 70க்கு முன்பே - யூதாவிலிருந்து ஆட்சியாளர் வருவார். அபிஷேகம் பண்ணப்பட்டவரான அரசர்/பிரபு, எருசலேமின் அழிவுக்கு முன்பே - அதாவது கி.பி. 70க்கு முன்பே - வருவார். ஆகையால், உலகமானது தன் இரட்சகரை, கி.மு. 65ல் ரோமப் பேரரசு நிலை நாட்டப்பட்ட பிறகு, மற்றும் கி.பி. 70ல் எருசலேமின் தேவாலயம் அழிவதற்கு முன்பு ஆகிய இவ்விரண்டு நிகழ்ச்சிகளுக்கும் இடைப்பட்ட ஏதோ ஒரு காலத்தில் எதிர்பார்க்க முடிந்திருந்தது.

*சில விவரிப்புகளும் தகுதிப் பெயர்களும்.* இயேசுவை முன்னுரைத்திருந்த சில விவரிப்புக்களும் தகுதிப் பெயர்களும் பின்வருமாறு: Shiloh - சமாதான கர்த்தர் (ஆதி. 49:10), யாக்கோபின் நட்சத்திரம் (எண். 24:17), தீர்க்கதரிசி (உபா. 18:15), வருகிறவர் (சங். 118:26), தாவீதின் ஆண்டவர் (சங். 110:1), தேவகுமாரன் (சங். 2:7, 12), சீயோனின் ராஜா (சங்.2:6); Messiah - அபிஷேகம் பண்ணப்பட்டவர் (சங். 2:2), ஆராதிக்கத் தக்கவர் (சங். 2:12),

*இம்மானுவேல் (ஏசா. 7:14), தடுக்கலின் கல் (ஏசா. 8:14), அதிசயமான ஆலோசனை கர்த்தா (ஏசா. 9:6), வல்லமையுள்ள தேவன் (ஏசா. 9:6), நித்திய பிதா (ஏசா. 9:6). சமாதானப் பிரபு (ஏசா. 9:6), ஜனங்களின் கொடி (ஏசா. 11:10), விலையேறப்பெற்ற மூலைக்கல் (ஏசா. 28:16), தேவனுடைய தாசன் (ஏசா. 42:1), தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர் (ஏசா. 42:1), நீதியுள்ளவர் (ஏசா. 42:6), புறஜாதியாருக்கு ஒளி (ஏசா. 49:6), இரட்சகர் (ஏசா. 49:6), கர்த்தருடைய புயம் (ஏசா. 53:1), ஆட்டுக்குட்டி (ஏசா. 53:7), சாட்சி (ஏசா. 55:4), தலைவர் (ஏசா. 55:4), அதிபதி (ஏசா. 55:4), சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர் (ஏசா. 61:1), இரட்சிப்பவர் (ஏசா. 62:11), - கர்த்தர் (யேகோவா) (எரே. 23:6). தாவீது (ஓசியா 3:5), ஆளும் பிரபு (எரே. 30:21), கிளை (எரே. 23:5), மேய்ப்பர் (எசே. 34:23), மனுஷ குமாரன் (தானி. 7:13), நித்தியத்துக்கும் ஆளுகை செய்பவர் (மீகா 5:2), சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் (ஆகாய் 2:7), ஆலயத்தின் ஆண்டவர் (மல்கி. 3:1), உடன்படிக்கையின் தூதனுனவர் (மல்கி. 3:1), நீதியின் சூரியன் (மல்கி. 4:2). ("மேசியாவைப்பற்றிய தேர்ந்தெடுத்த தீர்க்கதரிசனங்களும் அவைகளின் நிறைவேற்றமும்'' என்ற புத்தகத்திலும் மற்றும் இப்புத்தகத்தில் "மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்'' என்ற அடுத்த பாடத்திலும் காணவும்)*

*நிகழ்தகவின் சட்டம். இயேசுவைப் பற்றி ஐம்பது தீர்க்கதரிசனங்கள் மட்டுமே கூறப்பட்டிருந்து, அவை நடப்பது மற்றும் நடக்காதிருப்பது ஆகிய இரண்டுக்குமே சமமான வாய்ப்புள்ளது எனக்கொண்டால் கூட, அந்த ஐம்பது தீர்க்கதரிசனங்களுமே நிறைவேறுவது என்பது மிக மிக அரிதாகும். உண்மையில் அதற்கு எதிரான நிகழ்தகவானது, "இரண்டின் ஐம்பது மடங்கில் இருந்து,* [infinity *எனப்படும்*] *கணக்கில் அடங்காத எண்ணிக்கை வரையுள்ளதாகும்; அதாவது, அந்தச் சூழ்நிலைகள் யாவும் கவிழ்த்துப் போடப் படுவதற்கான நிகழ்தகவு நூற்றுப் பன்னிரெண்டு கோடியே ஐம்பது லட்சத்திற்கும் பெரிதானதாகும்"* (Alexander Camp bell, *The Evidences of Christianity: A Debate). ஐம்பது நிகழ்ச்சிகள் சம காலத்தில் நடக்குமென்ற அனுமானமே, "அது நடப்பதற்கான மாபெரும் நிகழ்தகவைச் சரியாக விளக்கக் கூடிய கணக்கிலடங்கா எண்களின் மடங்கைத் தாண்டியிருப்பதாக உள்ளது'' (மேற்சொன்ன நூலில் இருந்தே இதுவும் எடுக்கப்பட்டது). இந்தக் கணக்கீட்டில் தேவனின் சார்பாகவும் தேவனுக் கெதிராகவும் மேற்கொள்ளப்படும் சித்தங்கள் மற்றும் செயல்பாடுகளைக் கைக்கொள்ளும் "திரளான கூட்டத்தாரின் கட்டுக்கடங்காத உணர்ச்சி, பிரபுக்களின் பேராவல், ஞானிகளின் படிப்புகள், துன்மார்க்கரின் சூழ்ச்சிகள், யுத்தங்கள், புரட்சிகள் மற்றும் நாடுகளின் பல்வகையான ஆளுமைச் சக்திகள்'' என்ற பெயருடைய சுயாதீன முகவர்களின் செயல்பாடுகள் எதுவும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.*[3]

*நூறு தீர்க்கதரிசனங்கள் மட்டுமே கூறப்பட்டிருந்திருந்தால் கூட, அவை யாவும் ஒரு மனிதரில் நிறைவேற வேண்டுமென்றால், அதற்கான நிகழ்தகவானது, இவ்வுலகம் முழுவதும் தண்ணீராய் இருந்து அதற்குள் விடப்படும் தண்ணீர்த் துளிகள் ஒன்றுக்கும் குறைவான எண்ணிக்கையில்*

*இருப்பதற்குச் சமமாகும்.*

*இதைக் கவனியுங்கள்: ஐம்பதோ அல்லது நூறோ அல்ல, ஆனால் கிறிஸ்துவைப் பற்றி 332 தீர்க்கதரிசனங்கள் கணக்கிடப்பட்டுள்ளன! ஆகையால் இயேசு, "அவருடைய [தேவனுடைய] சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்" (யோவா. 7:17) என்று உறுதிபடக் கூறியதில் வியப்பேதும் இல்லை. இயல்பான உலகில் ஆதாரங்கள் என்பவை நாத்திகர்களை எவ்விதச் சாக்குப் போக்கும் கூறாதபடி வைத்தது போலவே, தீர்க்கதரிசன வசனத்தின் ஆதாரங்கள் தேவபக்தியற்றவர்களை எவ்வித சாக்குப் போக்கும் கூறாதபடி வைத்துள்ளன.*

*இயேசு தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார் என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகின்றது. இந்த தீர்க்கதரிசனங்கள் யாவும் இயேசு வந்த பிறகு எழுதப்பட்டன என்று உறுதிப்படுத்துவதே இந்த உரிமைகோருதலை மறுப்பதற்கான ஒரே ஒரு வழியாகும். இருந்தாலும், இந்த உறுதிப்பாடும் கூட தேவபக்தியற்றவர்களாலேயே பொய்யென கருதப்பட்டது. தேவபக்தியற்ற யூதர்கள் கூட பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் பழைமைத்தன்மையையும், பாடக் கருத்தின் மிகச் சரியான தன்மையையும் பலமாக உறுதிப்படுத்தியுள்ளார்கள். இவ்விதமாக, கிறிஸ்துவை விசுவாசியாத யூதர்கள் கூட அவர்கள் அறியாமலேயே கிறிஸ்துவின் நிலைப்பாட்டிற்குப் பங்களித்துள்ளார்கள்!*

## இயேசுவால் கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள்

*வருகிறவராயிருந்த கிறிஸ்துவைப் பற்றிய 332 தீர்க்கதரிசனங்களில் ஒன்று அவரே ஒரு தீர்க்கதரிசியாய் இருப்பார் என்பதாகும். உண்மையில் தீர்க்கதரிசனம் கூறத் தமக்கிருந்த திறமையென்ற தெய்வீக நிலையை அவர் உரிமை கோரினார். இந்தத் தச்சர்/பிரசங்கியார் தம்மை ஒரு சிறு கூட்டமே பின்பற்றிக் கொண்டிருந்த நிலையில், தமது சொந்த மரணம் பற்றி முன்னு ரைத்தார் (மத். 16:21; மாற். 9:31; லூக். 9:22), இருப்பினும் தமது இயக்கத்தின் எதிர்கால விரிவாக்கம் பற்றி அவர் முன்னுரைத்தார். அவர் ஒரு அற்பமான தீர்க்கதரிசியாய் இருந்ததில்லை! அவரது மரணத்திற்குப் பின் அவரைப் பின்பற்றியவர்கள் திரளாய்ப் பெருகியது எப்படி என்பது வரலாற்றின் அற்புதங்களில் ஒன்றாக உள்ளது.*

*இயேசுவின் பல முன்னுரைத்தல்களில் எருசலேம் நகரைப் பற்றி இருபத்தைந்து முன்னுரைத்தல்கள் உள்ளன. சமாதானமான ஒரு காலகட்டத்தில் அவர் அதன் முழுமையான அழிவைப் பற்றித் தைரியமாய் அறிவித்தார் (மத். 16:21; மாற். 9:31; லூக். 9:22). 50×24×16 அடிகள் அளவு கொண்ட - ஆலயத்தின் மகிமையாயிருந்த - பெரிய, வெள்ளைச் சலவைக் கற்கள் ஒன்றின் மேல் ஒன்றிராதபடி அழிக்கப்படும் (மத். 24:2; மாற். 13:2; லூக். 21:6). இது நாற்பது ஆண்டுகளுக்குப் பின் அந்த நகரமானது தீத்துவின் கைகளில் அகப்பட்ட பிறகு நிறைவேறியது. அக்கினியானது ஆலயத்தின்*

பொன்னை உருக்கியது, ''உருகிய பொக்கிஷத்தை எடுப்பதற்காக, அவைகளை முற்றிலும் கொள்ளையிடுவதற்காக'' கற்கள் யாவும் கொள்ளை யிட்டவர்களால் தோண்டி எடுக்கப்பட்டன. தீத்து இராயன் அலங்காரமான அக்கட்டிடத்தைக் காக்க முயற்சி செய்தும் கூட, தனது படை வீரர்களின் பேராவலைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது, தேவாலயத்தின் அழகும் மதிப்பும் மிக்க கட்டிடத்தைக் காப்பதற்காக முயற்சி செய்ததில் தீத்து தன்னையறியாமலேயே இயேசுவின் வார்த்தைக்கு எதிராகச் செயல்படுவரானார். இருப்பினும், என்ன நடக்கும் என்பதை இயேசு அறிந்திருந்தார். ''இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்'' (மத். 24:25) என்று அவர் கூறினார். ரோமர்களின் இடர்ப்பாடு நிறைந்த முயற்சியானது ஆயுதங்களினால் அல்ல, ஆனால் தேவனுடைய சித்தத்தினாலேயே வெற்றி பெற்றது என்பதைப் பின்னாட்களில் தீத்து உணர்ந்து கொண்டார்.

கள்ள கிறிஸ்துகள் எழும்புவார்கள் என்று இயேசு கூறினார். ஏவப்பட்ட தீர்க்கதரிசிகள் என்று தங்களை உரிமை கோரிக் கொண்ட மனிதர்களின் பெயர்களை வரலாறு பதிவு செய்துள்ளது. இயேசுவின் வசனங்களின்படி, யுத்தங்களும், யுத்தங்களின் செய்தியும், பஞ்சங்களும், பூமியதிர்ச்சிகளும் உண்டாகும் (மத். 24:6, 7; மாற். 13:7, 8). யுத்தங்கள் மற்றும் யுத்தங்களின் செய்திகளை வரலாறு பதிவு செய்துள்ளதோடு, கிலவுதியு இராயனின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பஞ்சங்கள், கொள்ளை நோய்கள் மற்றும் பூமியதிர்ச்சிகள் ஆகியவற்றையும் அது பதிவு செய்துள்ளது. வானத்தில் இருந்து அடையாளங்கள் உண்டாகும் என்று இயேசு கூறினார் (லூக். 21:11). அவிசுவாசிகளாயிருந்தாலும் மதிப்புமிக்க வரலாற்றாளர்கள் மனிதர்களின் மனங்களில் ஆழ்ந்த பதிவை ஏற்படுத்தக் கூடிய, வழக்கத்திற்கு மாறான காட்சிகளைப் பதிவு செய்திருக்கின்றார்கள். எருசலேமின் வீழ்ச்சிக்கு முன் இயேசுவின் சீஷர்கள் கசப்பு மிக்க உபத்திரவங்களை அநுபவிப்பார்கள் என்று இயேசு முன்னதாகவே எச்சரிக்கை செய்திருந்தார் (மத். 24:9). இவ்விதமாக, நீரோவும் மற்ற பேரரசர்களும் கிறிஸ்தவர்களை என்ன செய்வார்கள் என்பதை இயேசு முன்னதாகவே அறிந்திருந்தார். உபத்திரவத்தினால் கிறிஸ்தவர்களில் பலர் விசுவாசத்தில் இடறல் அடைவார்கள் என்று இயேசு தீர்க்கதரிசனம் கூறியிருந்தார் (மத். 24:10). இந்த விசுவாச விலக்கங்கள் பற்றி வரலாறு கூறுகின்றது. எருசலேமின் வீழ்ச்சிக்கு முன்பாக, இந்த உலகம் முழுவதும் சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டியதாய் இருந்தது. கி.பி. 30 முதல் 70 வரையில் கிறிஸ்தவம் பரவியது பற்றிய பதிவேடானது வரலாற்றில் மிகவும் திகைப்புக்குரிய அத்தியாயமாயிருக்கின்றது. எருசலேமைச் சுற்றிலும் படைகள் சூழ்ந்து கொள்வதற்கு நாற்பது ஆண்டுகள் முன்னதாகவே இயேசு தமது சீஷர்கள் தப்பித்துக் கொள்ள வாய்ப்பைப் பெற்றிருப்பார்கள் என்று அறிந்திருந்தார். இதற்கு மறுபுறத்தில், ரோமப் படைத் தலைவரான செஸ்ட்டியஸ் கால்லஸ் என்பவர் முற்றுகையிடத் தொடங்கி, திடீரெனப் பின் வாங்கிச் சென்றது ஏன் என்பதற்கான காரணத்தை வரலாற்றாளர்கள் இன்னமும் அறியாமல் இருக்கின்றார்கள். முற்றுகையானது மறுபடி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்,

தப்பியோடும்படியான அறிவுரை இயேசுவால் தரப்பட்டிருந்ததை அறிந்திருந்த ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்வதற்காக எருசலேமைக் கைவிட்டு ஓடிப் போனார்கள். விசுவாசியாத யூதர்களோ அங்கேயே தங்கியிருந்து, அழிக்கப்பட்டார்கள் அல்லது அடிமைகளாக விற்றுப் போடப்பட்டார்கள்.

இயேசு, தாம் மிகவும் நேசித்ததும் கண்ணீர் விட்டதுமான எருசலேம் நகரமானது உலகின் மிகக் கொடிய உபத்திரவத்திற்குள்ளாகும் என்று முன்னுரைத்தார். இது எவ்வாறு நடந்தது என்பதை விசுவாசமற்ற வரலாற்றாளரான ப்ளேவியஸ் யோசிப்பஸ் கூறியுள்ளார். மனிதனை மனிதன் உண்ணத் தூண்டிய வழியற்ற நிலைமைகளுடன் கூட, இந்தக் கொலை பாதகத்தின் விளைவாக பதினோறு இலட்சம் குடிகள் கொல்லப் பட்டு, 97,000 பேர் அடிமைகளாகப் பிடித்துச் செல்லப்பட்டார்கள். பல ஆண்டுகளுக்குப் பின் கட்டிடங்களுக்கான அஸ்திபாரங்கள் தோண்டப்பட்ட பொழுது, அந்த இடம் குடியிருப்புப் பகுதியாய் எப்போதாவது இருந்திருக்கும் என்று ஒருவராலும் கூறப்பட முடியாது என்று கண்ணால் கண்ட சாட்சிகள் அறிக்கை தந்தார்கள். கி.பி. 70ல் ஜூலை 16 அன்று ஆலயத்தில் கடைசியாகப் பலி செலுத்தப்பட்டது, நகரமானது அதே ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 9ம் நாள் தீக்கொளுத்தப்பட்டது.

எருசலேமுக்கு வரப் போகிறதாயிருந்த முடிவைப் பற்றிய திகைப்பூட்டும் உண்மையை இயேசு முன்னுரைத்ததோடு, அப்பொழுது வாழ்ந்திருந்த தலைமுறையின் காலத்திற்குள்ளாகவே அம்முடிவு ஏற்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார். குறிப்பிட்டபடியே, நாற்பது ஆண்டுகளுக்குப் பின், தேவபக்தியற்ற படையொன்று அவரது வசனத்தை நிறைவேற்றியது.

சிறு விபரங்களைக் கூட அறிவித்திருந்த இயேசுவின் இந்த முன்னறிவைச் சிறுமைப்படுத்த ஒரே வழி எதுவென்றால், எருசலேமின் அழிவுக்குப் பின் அவரது சீஷர்களால் இந்த முன்னுரைத்தல்கள் எழுதப்பட்டன என்று கூறுவதேயாகும். இருப்பினும், இயேசுவின் முன்னு ரைத்தல்களைத் தருகின்ற சுவிசேஷங்கள் மூன்றும் எருசலேமின் வீழ்ச்சிக்கு முன்பே வெளியிடப்பட்டன என்பதை ஏராளமான ஆதாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவைகள் சுற்றோட்டத்தில் இருந்தது மட்டுமின்றி, நகரத்தை விட்டு ஓடிவிடும்படி இவைகளில் காணப்பட்ட அறிவுரை யின்படி கிறிஸ்தவர்கள் செயல்பட்டார்கள் என்பதும் உறுதியானதாகும். எருசலேமின் வீழ்ச்சியைப் பற்றிய முன்னுரைத்தல்களைத் தரத்தவறிய ஒரே ஒரு சுவிசேஷ நூலாகிய யோவான் எழுதிய சுவிசேஷமானது கி.பி. 70க்குப் பிறகு வெளியிடப்பட்டதாகும்.

இயேசுவின் முன் அறிவிப்புகளில் ஒன்றை, ஒன்றுமில்லாத தாக்குவதற்குப் பெருவிருப்புடன் மேற்கொள்ளப்பட்ட திகைப்பூட்டும் முயற்சி பற்றி வரலாற்றில் கூறுமளவுக்கு, இயேசுவின் முன்னுரைத்தல்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவைகளாகவும், அவைகளின் நிறைவேற்றங்கள் மிகவும் சரியானவைகளாகவும் இருந்தன. எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகு, அது புறஜாதியாரால் மிதிக்கப்படும் என்று இயேசு கூறினார். விசுவாசத்தை விட்டு விலகிச் சென்ற பேரரசரான யூலியு (கி.பி. 331-62), கிறிஸ்தவத்தின்

மீது தாம் கொண்டிருந்த வெறுப்புணர்வினால், எருசலேமில் இருந்து புறஜாதியார் எல்லாரையும் நீக்கி விட்டு, யூதர்களை அங்கு மறுபடியும் நிலைநாட்ட முடிவு செய்தார். ஆலயத்தை மறுபடியும் கட்டுவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகள் ஒவ்வொன்றும் தடைகளைச் சந்தித்தது, சில தடைகள் இயற்கையானவைகளாகவும், சில தடைகள் இயற்கைக்கு மேலானவைகளாகவும் இருந்தன என்று அறிக்கை தரப்பட்டுள்ளது. கடைசியாக, ஏராளமான பணத்தைச் செலவிட்ட பிறகு, யூலியு தம் திட்டத்தைக் கை விட்டார். அவர் தமது மரணத்தின் போது, "கலிலேயனே, நீ வெற்றி பெற்றாய்!" என்று ஆச்சரியத்துடன் அறிக்கையிட்டார்.

## முடிவுரை

பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றத்தைப் பற்றிய ஆர்வமிக்க இப்பாடமானது தெய்வீக எழுத்தாளர் ஒருவரையே சுட்டிக்காட்ட முடியும். தீர்க்கதரிசனங்கள் ஏக காலத்தில் நடைபெறுவதற்கு மிகவும் திட்டவட்டமானவைகளாய் இருக்கின்றன; அவைகள் யூகங்களாய் இருக்கக் கூடாத அளவுக்கு மிகச் சரியாக நிறைவேற்றப்பட்டுள்ளன. அவைகள் தேவனுடைய வசனத்தின் ஏவுதலை நாம் நம்பும்படி செய்யட்டும்.

குறிப்புகள்

[1]கல்தேயா என்பது பாபிலோனின் தெற்குக் கோடியில் உள்ள ஒரு பகுதிக்கு மட்டுமே தகுதியான பெயர் ஆகும். அப்பகுதியில் கல்தேயர்கள் ஆதிக்கம் மிக்கவர்களான பிறகு, அவர்கள் புதிய - பாபிலோனியப் பேரரசை நிலைநாட்டினார்கள். பாபிலோன் முழுவதற்கும் "கல்தேயருடைய பூமி" என்ற சொற்றொடரையும், பாபிலோனியப் பேரரசின் குடிமக்கள் யாவருக்கும் ''கல்தேயர்கள்'' என்ற சொற்றொடரையும் எபிரெயத் தீர்க்கதரிசிகள் பயன்படுத்தினார்கள். [2]நான்காம் அந்தியோகஸ் (எப்பிபெனெஸ்) என்பவர், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலமாகிய நானூறு வருடங்களின் போது, கி.மு. 175 முதல் 164 வரை சீரியாவை ஆண்டு வந்த ஒரு செல்யூஸிட் அரசராவார். இவர், யூதேயாவில் இருந்தவர்கள் உட்படத் தம் குடிமக்கள் யாவர் மீதும் Hellenistic என்ற வகைதெரியாக் கலாச்சாரத்தை நிர்ப்பந்தப்படுத்தினார். யூதமார்க்கத்தை அழிப்பதற்கு அவர் செய்த முயற்சிகள், விருத்தசேதனம், ஓய்வு நாள் ஆசரிப்பு, நியாயப்பிரமாணத்தை வாசித்தல் போன்றவற்றைத் தடை செய்யும்படி அவரை வழி நடத்தின. தேவாலயம் பரிசுத்தக் குலைச்சலாக்கப்பட்டது; யூதர்கள் விக்கிரக ஆராதனையில் பங்கேற்று, அசுத்தமான உணவைப் புசிக்க வேண்டியதாயிற்று. யூதர்களின் சுயாதீனத்தை மீட்டமைக்கும் பணியை உச்சகட்டத்திற்குக் கொண்டு சென்ற புரட்சி ஒன்றை யூதாஸ் மக்காபேயஸ் என்பவர் வழிநடத்தினார். கி.மு. 141ல் தேசமானது சீரியாவின் கட்டுப்பாட்டில் இருந்து விடுதலை பெற்றது. மக்காபேயர்களின் புரட்சியும், அதற்கு வழிகோலிய நிகழ்ச்சிகளும் ஏவுதல் பெற்றிராத புத்தகங்களான 1 மற்றும் 2 மக்காபேயர் என்ற புத்தகங்களின் பதியப்பட்டுள்ளன.
[3]Alexander Keith, *Evidence of Truth of the Christian Religion Derived From the Literal Fulfillment of Prophecy* (Philadelphia: Presbyterian Board of Publication, n.d.), 368-69.

# வேதாகமத் தீர்க்கதரிசனமும் எதிர்நிலையில் மனித தீர்க்கதரிசனமும்

*வேதாகமத் தீர்க்கதரிசனத்திற்கும், வெறும் மனித தீர்க்கதரிசனத்திற்கும் இடையில் உள்ள உறவானது ஒப்பீடு என்பதற்குப் பதில் ஒரு எதிரிடையாகவே இருக்கின்றது. நிரூபணம் செய்யப்பட்ட முன்னுரைத்தலின் தன்மை பற்றியும், ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய பொருளடக்கம் பற்றியும் ஆகிய இவ்விரண்டிற்குமே இது உண்மையாய் இருக்கின்றது. புறதெய்வத் தீர்க்கதரிசிகள் தங்கள் மனங்களில் நீதியை அல்ல, வளமையையே சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களின் உள்ளூர்த் தெய்வங்களை மட்டுமே அறிந்திருந்தார்கள். அவர்கள் ஒழுக்க நெறிகளையோ இரட்சிப்பையோ கொண்டிருந்ததில்லை. சுத்தமான கைகள், சுத்த இருதயம், மற்றும் ஒரு தெய்வக் கோட்பாடு ஆகியவற்றில் வேதாகம தீர்க்கதரிசனம் மட்டுமே தனித்து நிலைநிற்கின்றது.*

*முன்னுரைத்தலின் தன்மை பற்றிப் பார்க்கையில், வேதாகமம் மட்டுமே நிரூபணம் செய்யப்பட்ட நிகழ்ச்சிகளைக் கொண்ட நிறைவேறிய தீர்க்கதரிசனத்தை முன் வைப்பதாகக் கூறப்படலாம். இஸ்லாம், புத்த சமயம், கன்ஃப்யூஷியனிஸம், ஷின்ட்டோயிஸம் மற்றும் ஜொராஸ்டிரியனிஸம் ஆகியவைகளுக்குரிய புத்தகங்கள் முன்னுரைக்கும் முயற்சி எதையும் மேற்கொள்வதில்லை. புறதெய்வ வழிபாட்டாளரான டெல்பிக் என்ற பேச்சாளர் தீர்க்கதரிசனம் கூற முயற்சி செய்த போது, அது எப்பொழுதுமே பல பொருளுடையதாகவும், விளங்காத அர்த்தம் கொண்டதாகவுமே இருந்தது. தீர்க்கதரிசனம் கூறுவதற்குச் செய்யப்பட்ட மற்ற முயற்சிகளின் பொழுதும், தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொண்ட தீர்க்கதரிசிகளால் அவர்கள் சங்கடம் அடையவே நேரிட்டது.*

*மற்ற மதங்களில் தீர்க்கதரிசனம் இல்லாமை, புறதெய்வப் பேச்சாளர்களின் பயனற்ற முயற்சி, மற்றும் தன்னையே தோல்வியுறச் செய்யும் முயற்சிகள் ஆகியவை யாவும் வேதாகம தீர்க்கதரிசனத்தை மிகவும் மதிக்கத் தக்கதாகவும், ஒப்பிடுவதினால் பயபக்தியுடன் பார்க்கத் தக்கதாகவும் ஆக்குகின்றன.*